(8) அறிவிப்பு

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை இப்போது ஒத்தி வைக்கப்பட்டு, மீண்டும் 26-2-1982 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்குக் கூடும். அன்று ஏற்கெனவே அறிவித்தபடி 1982-83 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை பேரவைக்கு அளிக்கப்படும். அன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை. வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

102. 1980-81 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு திரையரங்கு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை (தமிழ்) (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

103. தமிழ்நாடு பொருள் போக்குவரத்துக் கழகத்தின் 1979 ஆம் ஆண்டிற்கான நான்காம் ஆண்டறிக்கை (ஆங்கிலம்) 1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

எதுவுமில்லை.

இணைப்பு

[....ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 26க்கான விடையைக் காண்க]

விவர அறிக்கை

தற்பொழுது சிறு சேமிப்புப் பற்றி பொது மக்களுக்கு பல முறைகளில் விளக்கங்கள் தரப்படுகின்றன.

விளம்பர ஊர்திகளில் சிறு சேமிப்பு அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று சிறு சேமிப்பைப் பற்றி விளக்கும் சினிமா படங்களைப் பொது மக்களுக்குப் போட்டுக் காட்டி பிரச்சாரம் செய்கிறார்கள். விளம்பர நாடகங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு ஆண்டும் நடத்தப்படுகின்றன. சிறு சேமிப்பு விளம்பரங்கள் அவ்வப்பொழுது காலத்திற்கேற்ப தினசரி செய்தித் தாள்களிலும், பயன்தரும் மாத இதழ்களிலும் வெளியிடப்படுகின்றன. தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமும் சிறு சேமிப்புப் பற்றி அவ்வப்போது பொது மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகிறது. சிறு சேமிப்பின் அவசியத்தைப் புரிந்து கொள்ளும் வகையிலும், விளம்பரம் செய்யும் வகையிலும், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் நாவன்மைப் போட்டி தமிழிலும், ஆங்கிலத்திலும் நடத்தப்பட்டு வெற்றிப்பெறுபவர்களுக்குப் பரிசளிக்கப்படுகிறது.